DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 140/2023** | | |
| Deposition of Witness for | PW 4 - Recall<br>Prosecution<br>Court | | |
| Name | : திருமதி.ஜெயசுதா | | : |
| Father/Husband Name | : க.பெ. திரு.சம்பத்குமார் | Calling | : மருத்துவர் |
| Village | : கள்ளக்குறிச்சி | | : |
| Taluk | : கள்ளக்குறிச்சி | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.07.2025

**சாட்சி முன்னிலை. சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு, உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

துவக்க நேரம் 12.31

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) இந்த வழக்கு சம்பந்தமாக நான் விபத்து பதிவேட்டை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் கொடுத்த விபத்து பதிவேடு கார்பன் காப்பி என்றால் சரிதான். விபத்து பதிவேட்டின் அசல் காப்பியை கொடுக்கவில்லை என்றால் அது பெத்தநாயக்கன்பாளையம், அரசு மருத்துவமனையில் உள்ளது.

2. ஒரு நபருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று ஆர்த்தோ மருத்துவர்தான் கருத்துரை வழங்கவேண்டும் என்றால் சரிதான், நான் சேலம், அரசு மருத்துவமனையில் ஆர்த்தோ மருத்துவர் வழங்கிய கருத்துரையை பேரில்தான் நான் கருத்துரை வழங்கியுள்ளேன்.

3. சேலம், அரசு மருத்துவமனையின் ஆர்த்தோ மருத்துவர் வழங்கிய கருத்துரையை நான் போலிசாரிடம் வழங்கினேனா என்றால் அது போலிசார்தான் சேலம் மருத்துவமனையில் இருந்து வாங்கிவந்து, என்னிடம் காண்பித்து, கருத்துரை பெற்றுச்சென்றார்கள்.

4. இந்த வழக்கில் காயம்பட்ட நபரின் நுண்கதிர் படம், அதன் ரிப்போர்ட்டையும் பார்த்தேனா என்றால் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் அதற்கான வசதி இல்லை, எனவே, நான் சேலம், அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தேன்.

5. என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு(அ.த.சா.ஆ- 3) நான்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டின் பின்னால் எழுதியுள்ள கருத்துரை நான் எழுதியதுதான் என்றால் சரிதான்.

6. பொதுவாக, ஒரு நபரின் case sheet யை பார்த்தால்தான் அவருக்கு ஏற்பட்ட காயம், காயத்தின் தன்மை, எலும்பு முறிவு ஏற்பட்ட இடம், நுண்கதிர் படம் எடுக்கப்பட்ட விவரம், அதனுடைய வரிசை எண், தேதி, சிகிச்சை குறித்த விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் cash sheet யை பார்க்கவில்லை என்றால் சரிதான், சேலம், அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள்தான் வைத்திருந்தார்கள்.

7. இந்த வழக்கில் காயம்பட்டதாக சொல்லும் நபருக்கு வலது கையில்தான் எலும்பு

முறிவு ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்டதாக சொல்லும் அழகுதுரைக்கு சேலம் மருத்துவரால் அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த விவரத்தை நான் சரிவர பார்க்காமல் போலிசாரால் கேட்டதால், நான் இந்த கருத்துரை சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சேலம் மருத்துவரால் வழங்கப்பட்ட காயச்சான்றிதழை பார்த்துதான், கருத்துரை சான்று வழங்கினேன்.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.46

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/-A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.